# மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

முயற்சியாண்மைக்கல்வி I, II
Entrepreneurship Studies I,II

மூன்று மணித்தியாலம்

தரம் - 11

63 T

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

❖ வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

கவனிக்க:-

I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

## பகுதி - I

01) முயற்சியாண்மை என்பது
(1) பெறுமதிமிக்க எண்ணமாகும்.
(2) அறிவுடன் தொடர்புடைய ஒன்றாகும்.
(3) நபருடன் மட்டும் தொடர்புடைய ஒரு மனோநிலையாகும்.
(4) வெற்றிக்கு அவசியமான ஒன்றாகும்.

02) ஏனையோரின் கருத்துக்களை மதிக்கின்ற போதும் அதன் மீது தங்கியிருக்காமையும் தாம் செல்ல வேண்டிய வழியைத் தாமே தீர்மானித்தலும் முயற்சியாண்மையில்
(1) சுகந்திரம் (2) அர்ப்பணிப்பு (3) பொறுப்பு (4) சவால் எனக் கருதலாம்

03) செல்வா என்ற வணிகர் தனது வியாபார நிலையத்தை பகல் வேளையில் மாத்திரம் திறந்து வைத்துள்ளார். இவரது எப்பண்பு ஆக்கத்திறனுக்குத் தடையாக அமைந்துள்ளது.
(1) நம்பிக்கைகள் பெறுமானங்கள் உறுதியாக நம்புதல்.
(2) தவறுகளை விமர்சனங்கள் தொடர்பில் காணப்படும் பீதி.
(3) நியதிகள் பாரம்பரியங்களை விளக்கமின்றிப் பின்பற்றல்.
(4) நடைமுறைப்படுத்த தடை காணப்படலாம் என எண்ணுதல்.

04) தனியாட்கள் தமது ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ள உதவியாக அமைவது
(1) உடனடிப் பெறுபேற்றை எதிர்பார்த்தல்.
(2) கல்வி, பயிற்சி.
(3) தோல்விகளைக் கண்டு சோர்வடைதல்.
(4) ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வு என எண்ணுதல்.

05) பின்வருவனவற்றுள் தேவைகளின் பண்பாகக் கொள்ள முடியாதது
(1) பிறப்பிலேயே உருவாகும். (2) எண்ணிறைந்தவை.
(3) பொதுவானவை. (4) வணிகர்களால் உருவாக்கக்கூடியவை.

Past Papers Wiki



06) சுமணா நிகழ்நிலை வணிகத்தினூடாக தனது பிறந்த நாளுக்கான ஆடை ஒன்றை வாங்கினார் இது
(1) ஒரு புதிய கண்டுபிடிப்பாகும். (2) ஒரு பின்பற்றலாகும்.
(3) ஒரு விரிவாக்கமாகும். (4) ஒரு இணைப்பாகும்.

07) ராம் தனது தந்தையாரின் உணவகம் ஒன்றை நடாத்தி வருகின்றார். வினித் அழுகிய மரக்கறிகளிலிருந்து தாவரங்களுக்கான வளமாக்கி ஒன்றைத் தயாரித்து வருகின்றார் இங்கு
(1) ராம், வினித் இருவரும் முயற்சியாளர். (2) இருவரும் வணிகர்கள்.
(3) ராம் முயற்சியாளர் வினித் வணிகர் (4) ராம் வணிகர் வினித் முயற்சியாளர்.

08) முயற்சியாண்மையில் முயற்சியாளனுக்கான அனுகூலமாக அமைவது
(1) வேலைவாய்ப்பு வழங்கல்.
(2) மொத்த தேசிய உற்பத்தி பங்களித்தல்.
(3) சுகந்திரமும் ஆகக் கூடிய திருப்தியும்.
(4) புதிய பொருட்கள் சேவைகள் சந்தையில் அறிமுகமாதல்.

09) பீற்றர் தமது பிரதேசத்திலுள்ள வீடற்ற 10 குடும்பங்களுக்கு வீடமைத்து கொடுக்கும் திட்டம் ஒன்றை மேற்கொண்டார். இங்கு பீற்றர்
(1) வணிக முயற்சியாளர் ஆவார். (2) சமூக முயற்சியாளர் ஆவார்.
(3) நிறுவன முயற்சியாளர் ஆவார். (4) அக முயற்சியாளர் ஆவார்.

10) பின்வருவனவற்றுள் விருப்பமாக கொள்ளக் கூடியது
(1) புத்தகம் (2) சுகாதாரம் (3) உறையுள் (4) பொழுதுபோக்கு

11) பின்வருவனவற்றுள் முயற்சியாளரின் வகிபாகங்களைக் குறிக்கும் விடைத் தொகுதி எது?
(1) உரிமையாளர், ஊழியர், முகாமையாளர்
(2) உரிமையாளர், தலைவர், ஊழியர்
(3) உரிமையாளர், ஊழியர், முகாமையாளர்
(4) தலைவர், வணிகர், உரிமையாளர்

12) ராம் நிகழ்நிலை வணிகத்தின் மூலம் "அமேசன் நிறுவனத்திடமிருந்து" ஒரு மணிக்கூட்டினை வாங்கினார் இங்கு செல்வாக்குச் செலுத்தும் சூழல் காரணிகள்
(1) தொழில்நுட்பச் சூழல், பூகோளச் சூழல்
(2) இயற்கைச் சூழல், மக்கட் சூழல்
(3) அரசியல் சட்டசூழல், சமூக கலாச்சாரச் சூழல்
(4) அரசியல் சூழல், மக்கட் சூழல்

13) பின்வருவனவற்றுள் இலங்கையின் பொருளாதாரத்தில் ஆரம்பத்துறைக்குரிய விடயமாகக் கருதக்கூடியது
(1) சப்பாத்து உற்பத்தி (2) இரத்தினக்கல் கைத்தொழில்
(3) பாலம் கட்டுதல் (4) காப்புறுதித் தொழில்

14) வணிகம் ஒன்றின் உட்கட்டமைப்பு வசதியாகக் கருதமுடியாதது
(1) மின்சாரவசதி (2) போக்குவரத்துவசதி
(3) மூலப்பொருள் கிடைப்பனவு (4) தொலைத்தொடர்பு வசதி

15) ரத்தி பால்மாவிலிருந்து ஆடை நீக்கிய பால்மா உற்பத்தி செய்ய அவ் வணிகம் எண்ணுமாயின் இப் புத்தாக்கமானது
(1) பதிலீடாகும். (2) மீள உருவாக்கல்
(3) பெரிதாக்கல் (4) வேறாக்கல் ஆகும்.

16) வணிக எண்ணம் தொடர்பான சரியான கூற்று எது?
(1) வணிக எண்ணங்கள் சிக்கலானவை.
(2) வணிக எண்ணங்கள் குறிப்பிடத்தக்க சிலவாகும்.
(3) பல்வேறு மூலங்களிலிருந்து அதிகளவான வணிக எண்ணங்கள் உருவாகும்.
(4) வணிக எண்ணத்தைப் பகிரங்கப்படுத்த முடியாது.

17) சூட்சுமப் பகுப்பாய்வில் எத்தனை எண்ணங்கள் பகுப்பாய்வு செய்து தெரிவு செய்யப்படும்?
(1) 1 (2) 2 (3) 3 (4) 10

18) வணிகம் ஒன்றின் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் போன்ற விடயங்களை ஆராய்வது?
(1) முழுப் பகுப்பாய்வு (2) சந்தை ஆய்வு
(3) *SWOT* பகுப்பாய்வு (4) சூட்சுமப் பகுப்பாய்வு

19) புதிய கண்டுபிடிப்புக்கு அரசால் வழங்கப்படும் சான்றிதழ்
(1) பதிப்புரிமை (2) ஆக்கவுரிமை
(3) தனியுரிமை (4) வியாபார பதிவு சான்றிதழ் எனப்படும்.

20) பப்பாசி பயிரிட்டு பழங்களை விற்பனை செய்யும் வணிகம் ஒன்றுக்கான பலமாக அமைவது
(1) அரசு இப் பயிர்ச் செய்கையாளருக்கு மானியம் வழங்கல்.
(2) கடும் வரட்சியால் பயிர்கள் அழிவடைதல்.
(3) உரிமையாளர் அதிக முதலீடுகளை ஈடுபடுத்தியமை.
(4) பப்பாசிப் பழங்களை வாங்குவோர் அதிகரித்தமை.

21) இன்று துரித உணவுக்கான உணவகங்கள் அதிக எண்ணிக்கையில் காணக் கூடியதாக உள்ளது. இது உணவக வணிகத்தில் ஈடுபடுவோருக்கு
(1) பலமாகும். (2) பலவீனமாகும் (3) சவால் (4) வாய்ப்பு

22) பாண் உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பாண் தயாரிப்பவரின் கூலி அடங்குவது?
(1) நிர்வாகத் திட்டத்தில் (2) உற்பத்தி திட்டத்தில்
(3) நிதித் திட்டத்தில் (4) சந்தைப்படுத்தல் திட்டத்தில்

23) வணிகத்தைப் பற்றிய படம் ஒன்றை மனதில் நிர்மாணித்துப் கொள்ளும் முகமாக முன்வைக்கப்படும் வணிகத் திட்டத்தின் பிரிவு
(1) நிறைவேற்றுச் சுருக்கம் (2) நிதித்திட்டம்
(3) நிர்வாகத் திட்டம் (4) உற்பத்தித் திட்டம்

24) ரதி புதிய சோப் ஒன்றைத் தயாரிக்க எண்ணுகின்றார். அவரது சோப்பின் கேள்வியிலும் அவரது இலாபத்திலும் தாக்கம் செலுத்தும் பிரதான காரணி
(1) இடம் (2) விலை (3) மேம்படுத்தல் (4) இடர்

PAST PAPERS WIKI

25) பிரேகரிப்பட்ட உற்பத்தி வணிகம் ஒன்றுக்கான மின்சார வசதி பெற்றுக் கொள்வதற்கான செலவு

(1) உற்பத்தி கிரயமாகும் (2) நிர்வாகச் செலவாகும்.

(3) ஆரம்பிக்க முன்னரான செலவு (4) நாளாந்த நடவடிக்கைக்கான செலவு

26) பாதணி உற்பத்தி நிறுவனம் ஒன்று கிரயங்கள் கீழே தரப்படுகின்றன. இதில் உற்பத்தியல்லாக் கிரயத்தில் உள்ளடக்கப்படுவது?

(1) தோலுக்கான கிரயம் (2) பாதணி தைப்பவர் கூலி

(3) வங்கிக் கடன் வட்டி (4) தொழிற்சாலையின் வாடகை

27) வணிக அமைப்பு ஒன்றின் பொதுவான பண்பாகக் கருதப்படமுடியாதது?

(1) வளப்பாவணை (2) இலாப நோக்கத்துடன் மட்டும் செயற்படுதல்.

(3) பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடல். (4) கூட்டுத் தொடர்பு காணப்படல்.

28) வணிகங்களை தனியார் அரசு என வேறுபடுத்துவது

(1) உரிமை (2) நோக்கம் (3) அளவு (4) தன்மை

29) தனி வியாபாரத்தினை பதிவு செய்யும் போது வழங்கப்படும் ஆவணம்

(1) பதிவுச் சான்றிதழ் (2) கூட்டிணைப்பு சான்றிதழ்

(3) வியாபாரப் பதிவுசான்றிதழ் (4) உருவாக்கல் பத்திரம்

30) தனிவியாபாரம், பங்குடமை வணிகம் இரண்டிற்கும் பொதுவான அம்சமாகக் கொள்ள முடியாதது

(1) பதிவுக்கான சட்டம் (2) சட்ட ஆளுமை தன்மை

(3) நட்டப் பொறுப்பு வரையறை (4) அங்கத்தவர் எண்ணிக்கை

31) பல்வேறு ஆற்றல்களைக் கொண்டோர் ஒன்றிணைந்து செயற்படும் அமைப்பாகக் காணப்படுவது?

(1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (2) கூட்டுறவு

(3) அங்கீகார வணிகம் (4) பங்குடமை

32) வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் ஆகக்குறைந்த, ஆகக் கூடிய பங்குதாரர் எண்ணிக்கை

(1) $1-50$ (2) $2-20$ (3) $1-20$ (4) $2-50$

33) நாட்டில் முயற்சியாண்மைக் கலாச்சாரம் உருவாக வேண்டியதன் தேவையாக கருதப்படமுடியாதது

(1) வேலைவாய்பை உருவாக்க (2) பொருளாதார வளர்ச்சியடைய

(3) வருமான ஏற்றத்தாழ்வை குறைக்க (4) பொழுது போக்காக அமைய

34) ஊழியர் சேமலாப நிதியை தமது ஊழியருக்காக உரிய முறையில் செலுத்துதல் எவ்வகையான சமூகப் பொறுப்பாகும்?

(1) பொருளாதாரப் பொறுப்பு (2) சட்டப் பெறுப்பு

(3) பண்பாட்டுப் பொறுப்பு (4) பொதுநல விருப்புடைய பொறுப்பு

35) பின்வருவனவற்றுள் வணிகம் ஒன்றின் ஊழியர்களின் எதிர்பார்ப்பாக எது அமையும்?
(1) தரமான பொருட்களை நியாயமான விலையில் பெறல்.
(2) போதிய இலாபத்தைப் பெறல்.
(3) நியாயமான சம்பளமும் தொழில் பாதுகாப்பும்.
(4) சூழல் மாசடைத்தலைக் குறைத்தல்.

36) ஒரு வணிகம் பெற்றுக் கொள்ளக் கூடிய நிதி சாரா ஊக்குவிப்பாக அமைவது
(1) பயிற்சியும் பதவியுயர்வும் (2) நிதி அன்பளிப்பு
(3) சலுகை வட்டிவீதத்தில் கடன் (4) பிணை இன்றிய கடன்

37) உற்பத்திக் பொருட்களுக்கான தரச்சான்றிதழை வழங்கும் நிறுவனம்
(1) இலங்கை ஏற்றுமதி சபை (2) இலங்கை தரக்கட்டளை நிறுவனம்
(3) கைத்தொழில் அபிவிருத்தி சபை (4) இலங்கை முதலீட்டு சபை

38) ரகு வணிகத்தின் உற்பத்தி செலவு மதிப்பீடு கீழே தரப்படுகின்றது. இவ் வணிகம் மாதத்திற்கு 10,000 சீமேந்து கற்களை உற்பத்தி செய்கின்றது?

| | |
|---|---|
| சீமெந்து | 300,000 |
| மண் | 200,000 |
| ஊழியர் கூலி | 80,000 |
| இயந்திர பெறுமானத்தேய்வு | 20,000 |

சீமெந்துக் கல் ஒன்றுக்கான அலகுக் கிரயம் யாது?
(1) 40/= (2) 60/= (3) 50/= (4) 38/=

39) சிறுவர்களுக்கான பாதணிகளைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை ஆரம்பிக்க தனுசா தீர்மானித்தார். அவரது முதலாவது மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் வருமாறு

| | |
|---|---|
| தோல் மற்றும் மூலப்பொருள் செலவு | ரூ 150,000 |
| ஊழியர் சம்பளம் | ரூ 60,000 |
| வாடகை | ரூ 50,000 |
| வணிகத் திட்டத்தை தயாரிக்கும் செலவு | ரூ 10,000 |

இத்தகவலின் பிரகாரம் தனுசா வணிகத்தின் மதிப்பிடப்பட்ட நாளாந்த வணிக நடவடிக்கைகளுக்கான செலவு (தொழிற்படு மூலதனம்)
(1) 270,000 (2) 260,000 (3) 110,000 (4) 210,000

40) பின்வருவனவற்றுள் சதா வணிகத்தின் காசு உட்பாய்ச்சலில் அடங்காத விடயம்
(1) உரிமையாளர் ஈடுபடுத்திய முதலீடு ரூ 500,000
(2) கடன்பட்டோரிடம் பெற்றபணம் ரூ 100,000
(3) வங்கிக்கடன் மீளச் செலுத்தியது ரூ 50,000
(4) விற்பனை வருமானம் ரூ 250,000

Past Papers Wiki



## பகுதி – II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.**

01) பின்வரும் சம்பவத்தை கவனமாக வாசித்து (*i*) தொடக்கம் (*x*) வரையுள்ள வினாக்களிற்கு விடையளிக்க.

சுரேஷ் தனது பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர் உணவு தயாரித்தல் தொடர்பான பாடநெறி ஒன்றைப் பின்பற்றினார். அக்காலப் பகுதியில் அவரது பிரதேசத்தில் காணப்பட்ட "பொழுது போக்கு மையம்" ஒன்றில் உணவுத் திருவிழா என்ற பெயரில் பல்வேறு வகையான பாரம்பரிய உணவுகள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு உள்ளூரில் காணப்படும் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட காய்கறிகளும் மூலப் பொருட்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. இயற்கையான முறையிலான தயாரிக்கப்பட்ட பாரம்பரிய உணவுகளை மக்கள் விரும்பி உண்பதை அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது. இயல்பாகவே தூர நோக்கும் புத்தாக்க சிந்தனையும் புதுமை விரும்பும் ஒருவராக சுரேஷ் காணப்படுவார்.

இவ் விடயங்களை ஆராய்ந்து அவதானித்த சுரேஷ் தனது பாடநெறியை பூர்த்தி செய்த பின்னர் "ஆரோக்கியா உணவகம்" என்ற பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளார். இதற்கு தனது தந்தையிடமிருந்து பெற்ற ரூ 500,000 ரூபாவையும் வங்கியிலிருந்து பெற்ற 7% வட்டியிலான 150,000/= யையும் பயன்படுத்த உள்ளார்.

i. சுரேஷ் "ஆரோக்கியா உணவகத்தினை ஆரம்பிக்க காரணமாக இருந்த விடயங்கள் இரண்டு தருக.

ii. சுரேஷிடம் காணப்படும் முயற்சியாண்மைப் பண்புகள் இரண்டு தருக.

iii. சுரேஷ் வணிகத்தினால் நிறைவேற்றப்படும் தேவை யாது? அதற்கான விருப்பங்கள் இரண்டு தருக.

iv. ஆரோக்கியா உணவகம் எவ்வகையான வணிகம்? அதன் பண்புகள் இரண்டு தருக.

v. இவ் வணிகத்தை நடாத்துவதனால் முயற்சியாளர் என்ற வகையில் சுரேஷிற்கு கிடைக்கும் அனுகூலம் இரண்டும், சமூகத்திற்கு கிடைக்கும் அனுகூலம் இரண்டும் தருக.

சுரேஷினால் ஆரோக்கியா உணவகத்திற்காக பிரேரிக்கப்பட்ட வணிகத்திட்டத்தின் சில தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| உணவு தயாரிக்கும் உபகரணம் | ரூ 200,000 |
| உணவகத் தளபாடம் | ரூ 225,000 |
| மாதாந்த மூலப்பொருள் கிரயம் | ரூ 150,000 |
| மாதாந்த ஊழியர் சம்பளம் | ரூ 55,000 |
| வணிகப் பதிவுக் கட்டணம் | ரூ 5,000 |
| மாதாந்த விற்பனை வருமானம் | ரூ 300,000 |
| மாதாந்த மின் கட்டணம் | ரூ 8,000 |
| மாதாந்த வாடகை | ரூ 4,000 |
| வணிகத் திட்டம் தயாரித்தல் | ரூ 3,000 |

மேற்குறித்த தகவல்களை அடிப்படையாக சுரேஷ் வணிகத்துடன் தொடர்புடைய பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

Past Papers Wiki



vi. மொத்த நிலையான சொத்துக்களின் பெறுமதியும் மொத்த முதலீடும் யாது?

vii. காசு உட்பாய்ச்சல் விடயங்கள் இரண்டும் காசு வெளிப்பாய்ச்சல் விடயங்கள் இரண்டும் தருக.

viii. ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகளின் பெறுமதி யாது?

ix. தொழிற்படு மூலதனத்தில் உள்ளடங்கும் விடயங்களும் அவற்றின் பெறுமதியும் யாது?

x. தேறிய இலாபம் யாது? $(2 \times 10 = 20$ புள்ளிகள்)

02) i. முயற்சியாண்மை என்பதை வரையறுக்க.

ii. புத்துருவாக்கத்திற்கு அடிப்படையாக அமையும் மூலாதாரங்கள் இரண்டைத் தருக.

iii. உற்பத்திக் காரணிகள் இரண்டை தந்து உதாரணம் தருக.

iv. முயற்சியாண்மை மூலம் ஒரு நாடு பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் நான்கு தருக.

v. வணிகருக்கும் முயற்சியாளருக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கு தருக.

$(5 \times 2 = 10$ புள்ளிகள்)

03) i. சிற்றளவு வணிகம் ஒன்றின் பண்புகள் நான்கு தருக.

ii. சிற்றளவு வணிகங்கள் பல்வேறு காரணங்களால் தோல்வியடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது இதற்கான காரணங்கள் நான்கு தருக.

iii. ராம் என்ற முயற்சியாளர் தனது வணிகத்திற்கான வணிகத்திட்டத்தை தயாரிப்பதுடன் நிறுவனத்திற்குத் தேவையான வளங்களையும் ஈடுபடுத்தி வருகின்றார். அவ்வப்போது ஊழியர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முயற்சியாளரின் வகிபாங்கள் இரண்டை உதாரணத்துடன் குறிப்பிடுக.

iv. பின்வரும் செயற்பாடுகள் முயற்சியாளரிடம் காணப்படவேண்டிய எத்திறன்கள் எனக் குறிப்பிடுக.

(அ) வணிகத்தின் போட்டித் தன்மைக்கு முகம் கொடுத்தல்.

(ஆ) இயந்திரங்களை சரியான இடத்தில் பொருந்துதல், இயக்குதல்.

v. முயற்சியாளர் முகம் கொடுக்கும் இடர் மற்றும் திரும்பல் ஆகியவற்றுக்கான தொடர்பை விளக்குக. $(5 \times 2 = 10$ புள்ளிகள்)

04) i. அகச்சூழல் காரணியின் பண்புகள் இரண்டு தருக.

ii. வணிகச்சூழலிலுள்ள உண்மையான மாற்றங்களை அறிந்து கொள்வதனூடாக முயற்சியாளருக்கு கிடைக்கும் பயன்கள் நான்கு தருக.

iii. காந்தன் என்பவர் உணவகம் ஒன்றை நடாத்தி வருகின்றார். அவரது வணிகத்துடன் நெருங்கிய தொடர்புடைய புறச்சூழல் காரணிகள் நான்கு தருக.

iv. பின்வரும் நடவடிக்கைகள் பலமா பலவீனமா எனக் குறிப்பிடுக.

*1)* புதிய தொழினுட்பம் பயன்படுத்தப்படல்.

*2)* ஊழியர்களுக்கிடையே சுமூகமான உறவு காணப்படல்.

v. இலங்கையிலுள்ள பௌதீக வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய வணிக வாய்ப்புக்கள் இரண்டு தருக. (5 × 2 = 10 புள்ளிகள்)

05) i. முயற்சியாளர் ஒருவருக்கு வணிக எண்ணங்கள் தோன்றும் மூலங்கள் நான்கு தருக.

ii. புதிய வணிகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ள முயற்சியாளர் ஒருவர் மூலதனம் திரட்டக் கூடிய வழிகள் நான்கு தருக.

iii. பாடசாலை ஒன்றினால் தயாரிக்கப்படும் திட்டமிடல் அறிக்கைகள் நான்கு தருக.

iv. மோகன் புதிய உணவகம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றார். இதற்கான வணிகத் திட்டத்தை தயாரிக்க வேண்டியதன் தேவைக்கான காரணங்கள் நான்கு தருக.

v. சந்தை ஆய்வின் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் நான்கு தருக.

(5 × 2 = 10 புள்ளிகள்)

06) i. உரிமையடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்தி உதாரணம் தருக.

ii. பங்குடமை வணிகம் ஒன்றில் ஒப்பந்தம் உருவாகும் வழிகள் எவை?

iii. பின்வரும் வணிகங்கள் பதிவு செய்யப்படும் சட்டங்களைக் குறிப்பிடுக.

*1)* தனிவியாபாரம்

*2)* கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

iv. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அனுகூலங்கள் நான்கு தருக.

v. வணிக ஒழுக்கம் என்பதால் கருதப்படுவது யாது? (5 × 2 = 20 புள்ளிகள்)

07) i. வணிகம் ஒன்றில் அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிட்டு அவர்களின் எதிர்பார்ப்புக்கள் எவை எனக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

ii. வணிகம் ஒன்றுக்கு கிடைக்கும் நிதிசாரா ஊக்குவிப்புக்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

iii. சுரேன் வணிகத்தின் தை மாத்திற்கான காசு உள்வருகையினையும் காசு வெளிச் செல்கையினையும் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட விற்பனை | ரூ 500,000 |
| உரிமையாளர் மூலதனம் | ரூ 300,000 |
| வாடகைக் கொடுப்பனவு | ரூ 30,000 |
| விற்பனைக்கான பொருட்கள் கொள்வனவு | ரூ 310,000 |
| சம்பளமும் கூலியும் | ரூ 65,000 |
| வாங்கிய தளபாடம் | ரூ 150,000 |

சுரேன் வணிகத்தின் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரித்து மொத்த காசு உட்பாய்ச்சல், மொத்த காசு வெளிப்பாய்ச்சல், இறுதி காசு மீதி என்பவற்றைக் கணிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi


Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library